இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 65 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 28 – திங்கள்கிழமை 14 அக்டோபர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 65 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 28 - Monday 14 October 2024 - Dak 12 Pages ₹ 5.00


## முட்டுக்காட்டில் ரூ.487 கோடி மதிப்பில் அமைகிறது

# கலைஞர் பன்னாட்டு அரங்கம்!



மூத்த பத்திரிகையாளர் முரசொலி செல்வம் அவர்களின் மறைவை அடுத்து, அவரது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவிக்க கோபாலபுரம் வருகை தந்த மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி.இராதாகிருஷ்ணன், முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், திருமதி செல்வி செல்வம் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார். பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன், பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத் தலைவர் சக்கரவர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

## டெண்டர் – தமிழ்நாடு அரசு வெளியிட்டது!

**சென்னை, அக். 14 -**

**சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலை முட்டுக்காடு பகுதியில் 487 கோடி ரூபாய் செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைப்பதற்கான அரசாணை வெளியிட்டதைத் தொடர்ந்து டெண்டர் அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.**

சுமார் 5 ஆயிரம் பேர் அமரக்கூடிய உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம் சென்னையில் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு அறிவித்தார். சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையம் வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை என்பதால், உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள முட்டுக்காடு கிராமத்துக்குட்பட்ட பகுதியில் 34 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டது. இந்நிலையில், முட்டுக்காடு பகுதியில் 487 கோடி ரூபாய் செலவில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் கலைஞர் பன்னாட்டு அரங்கம் அமைப்பதற்கான டெண்டர் அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 102 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 ஆயிரம் இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடமும், 172 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரம் நபர்கள் பார்வையிடும் வசதிகொண்ட கண்காட்சி அரங்கமும் அமைக்கப்பட உள்ளது. மேலும், 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கூட்ட அரங்குகள், அரங்கம் ஆகிய வசதிகளும் அமைக்கப்பட உள்ளன. திறந்தவெளி அரங்கம், உணவு விடுதிகள், 10 ஆயிரம் வாகனங்களை நிறுத்தும் அளவுக்கு வாகன நிறுத்த வசதிகள் மேற்கொள்ளப் படவுள்ளன. மேலும் வெளிப்புற பணிகளான சாலை வசதி, சுற்றுச்சுவர் வசதி, நுழைவு வாயில் உள்ளிட்டவைகள் 105 கோடி ரூபாயில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. 2025ம் ஆண்டு இறுதியில் அல்லது 2026ஆம் ஆண்டு தொடக்கத்தில் கலைஞர் பன்னாட்டு அரங்க கட்டுமான பணிகளை முடிக்க பொதுப்பணித்துறை திட்டமிட்டுள்ளது.

# கனமழையை எதிர்கொள்ளத் தயார்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வுக்குப்பின் பேட்டி!

**சென்னை, அக். 14 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள பணிகளை ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வுக்குப் பின் பேட்டியளித்த அவர், கனமழையை எதிர்கொள்ள அரசு தயார் எனக் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள பணிகளை ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, துணை முதலமைச்சர் அவர்கள், 1913 கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி ஆய்வு மேற்கொண்டார், தொடர்ந்து வரப்பெற்ற புகாருக்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:-

வடகிழக்குப் பருவமழை தொடங்கவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசு துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்வதற்காக வருவாய்த் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையின் அடிப்படையில், அடுத்து வரும் நாட்களில் தமிழ்நாட்டில் அதிதீவிர கனமழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது 20 செ.மீ.க்கு மேலான மழைப்பொழிவு இருக்கும் என்று வானிலை மையம் கூறியுள்ளது. இதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறோம். இதில் பொதுமக்களின் உயிரும், உடைமைகளும் காக்கப்பட வேண்டும் என்பது தான் முதல் முக்கியத்துவம். அதை மனதில் வைத்தே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைக்காலத்தில் பொதுமக்களுக்கான பிரத்யேக உதவி எண்ணாக 1913 வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுப்பாட்டு அறையில் மொத்தம் 150 நபர்கள் 4 சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை உடனுக்குடன் வழங்குவார்கள். அவசர உதவி எண் தவிர, சமூக ஊடகம் (Social Media), வாட்ஸ்ஆப், 'நம்ம சென்னை' தளம் போன்றவற்றிலும் மழை பற்றிய தகவல்கள் உடனுக்குடன் வழங்கப்படும்.

மேலும், அரசுடன் இணைந்து செயல்படுவதற்கு 13 ஆயிரம் தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர். தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கினால் வெளியேற்றுவதற்காக 100 குதிரைத் திறன் கொண்ட 100 எண்ணிக்கையிலான மோட்டார் பம்புகள் தாழ்வான பகுதிகளில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மழை நீர் தேங்கக்கூடியவை என்று கண்டறிப்பட்டுள்ள 31 இரயில்வே கல்வெட்டுகள் ஆழமாக சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த நிவாரண மையங்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை அரசு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு உறுதி செய்து நிறைவேற்றி தருவார்கள். இதுமட்டுமன்றி, தமிழ்நாடு அரசின் சார்பில் "TN ALERT" என்ற புதிய செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்த செயலியை பதிவிறக்கம் செய்து மழைப்பற்றிய தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம்.

பல்வேறு வானிலை மாதிரிகளைப் பயன்படுத்தி, வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடிய அனைத்துப் பகுதிகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்போது மழைநீர் வடிகால் பணிகள் நிறைவு பெறாமல் உள்ள ஓரிரு இடங்களில், அவற்றை சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்களின் பார்வைக்கு அப்படி ஏதாவது மூடப்படாமல் இருக்கும் கழிவுநீர் பாதைகள் பற்றி தகவல் தெரிந்தால், அதனை மாநகராட்சிக்கு ட்விட்டர் போன்ற தளங்களில் தெரிவிக்கலாம். அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தரையின் மேலே கிடக்கும் அனைத்து கேபிள்களையும் மூடுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மின்சாரத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. தாழ்வான மின்மாற்றிகள் அதிக உயரத்திற்கு


தொடர்ச்சி 3–ஆம் பக்கம்


### ‘தமிழ்நாடு’ என்றென்றும்

## சங்கரலிங்கனாருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது!

### நினைவு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, அக். 14-**

**வீரத்தியாகி சங்கரலிங்கனார் நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பதிவில், அந்த உத்தமத் தியாகிக்குத் தமிழ்நாடு என்றென்றும் நன்றிக் கடன் பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.**



வீரத்தியாகி சங்கரலிங்கனார் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

"வீரத்தியாகி சங்கரலிங்கனாருக்கு நாம் அனைவரும், நமது நெஞ்சு நெக்குருக வணக்கம் கூறுகிறோம்.

அவர் காட்டிய தியாகப் பாதையில் செல்வதென்பது அனைவருக்கும் சாத்தியமானதல்ல; ஆனால் அவருடைய தியாகத்தை மதிக்க மறுப்பவர், மறந்து திரிபவர், தமிழராகார், மனிதராகார்!" எனப் பேரறிஞர் அண்ணா நெக்குருகப் போற்றிய விருதுநகர் சங்கரலிங்கனார் 'தமிழ்நாடு' என்ற பெயர் பெற 76 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தம் இன்னுயிரையே ஈந்த நாள் இன்று!

அந்த உத்தமத் தியாகிக்குத் தமிழ்நாடு என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.